
ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசாய நம:

ஸ்ரீ திருப்பதி

# ஸ்ரீ வெங்கடேசுவர தேர்வண்டிக்கால்

# பிரார்த்தனை கீர்த்தனைகள்.



இஃது

திருப்பதி புஸ்தக வியாபாரம்

எம். வி. ருத்திரைய்ய நாயுடு அவர்கள்

விருப்பத்தின்படி

பாலகவி. C. M. K. சாஸ்திரியாரால்

இயற்றியதை,

சென்னை, மண்ணடி

சரவணபவ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1929.

இதன் விலை] *All Rights Reserved.* [அணா 6.

# இனிய தமிழ் நாவல்களும், கதைப் புத்தகங்களும்.

அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ளமங்கை 1-12-0

இது ஓர் அபூர்வமான துப்பறியும் நாவல். 346-பக்கங்கள் கொண்டது. இக்கதா நாயகியின் குணங்கள் யாவராலும் பின்பற்றக்கூடியது.

அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப்புதையல் 1 4 0

இந்த நாவல் ஆரம்பம் முதல் இறுதிவரையும் ஈடில்லாத இன்பப் பெருக்கை யளிக்கவல்லது. இதன் சுவையை வாசித்தே தெரியவேண்டும்.

மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம் 1 0 0

இது ஒரு புதுவிதமான அமைப்பில் எழுதப் பட்ட நாவல். இந்த நாவல் இரத்நத்தைப் படித்து முடிக்குமளவும் கீழே வைக்க மனம் வராது.

திருக்கழுக்குன்றத்துக் கொலை 1 8 0

இது ஓர் துப்பறியும் தமிழ் நாவல். இந்தத் துப்பறியும் நாவலை எவரும் முதல்தரமான தென்று போற்றுவதற்கு ஐயமில்லை. அனைவரும் படித்து மகிழத்தக்கது.

ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி 1 0 0

தலைவாங்கியதாய் எத்தனையோ கதைகள் இருப்பினும், அவ்வித புஸ்தகங்களிலெல்லாம் முதன்மைவாய்ந்து யுன்னதமாய்க் கொண்டாடத்தக்கது. அதிசய சிந்தாமணியே.

அம்பலவாணன் 1 8 0

இத்து ஓர் உயர்தரத் துப்பறியும் நாவல். இவை நவரஸங்களும் பொருந்தி வெகு அற்புதமாய் படிக்கப்படிக்க இனிப்பாயிருக்கும்.

மன்மத சரித சல்லாப சவால் இலாவணி 0 8 0

சிங்காரம், மோகிப்பு, வர்ணிப்பு அலங்கார வழிநடைப்பதங்கள் அநேக அரிய இராகதாள வர்ண மெட்டுகள் அமைந்தது.

விசித்திரத்துப்பறியும்கண் 3 0 0

இவ்வுலகத்து அநுபவங்களின் இன்சுவைகளெல்லாம் ஓர் உருக்கொண்டுள்ள நாவல்.

நவீன நவரத்தின ஒப்பாரி 0 5 0

இப்புத்தகம் வெகு புதுமாதிரியாகவும் மெச்சத்தக்கதாகவும், சாமன் பண்டிகைகளுக்கும் (எரிந்த கக்ஷி எரியாத கக்ஷி) இரண்டும் அடங்கியது புதுவிதமான சோகரஸ நூல்.

திண்ணைத்தூங்கி தடிராமன் 0 6 0

கணவனின் கடமை 0 4 0

அண்டப்புளுகன் அல்லது ஆகாசப்புளுகன் 0 8 0

காதலற்ற கல்யாணம் 0 1 0

தி. இராஜகோபால் முதலியார்,

ஸ்ரீ

திருப்பதி

ஸ்ரீ வெங்கடேஸ்வர

3124

# தேர்வண்டிக்கால் பிரார்த்தினை கீர்த்தனைகள்.



இஃது,

பாலகவி. **C. M.** கணபதி சாஸ்திரியாரால்

இயற்றியது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரர் புக்டிபோ,

எம். வி. ருத்திரய்ய நாயுடு,

அவர்களால்

சென்னை, மண்ணடி

சரவணபவ அச்சுக்கூடத்தில்


பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] *All Copy Right Registered.* [அணா 6.



## வெங்கடேசர் துதி.

நாடறிய வேங்கடத்தில் நாரா யணனிருக்க
காடுஞ் செடி தோறுங் கால்கடுத்து—ஓடாமல்
போட்டுவிட்ட மங்ஙனமே பொருள்தேடு வார்போல
நாட்டமுட னேமனமே நம்பு.



## ரங்கநாதர் ஸ்தோத்திரம்.


நம்ம மனைக்கு நாம்பெரியே ரானதுபோல்
செமமையுல கப்படைத்த ஸ்ரீ ஹரியை.—இம்மையெல்லாம்
முக்காலும் நம்பி மெய்வழியே நிற்பாரை
எக்காலுங் சாப்பாரென் றெண்,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# தேர்வண்டிக்கால் சரிதை என்ற

# வெங்கடரமண சரித்திரம்.



## விநாயகர் துதி.

வெண்பா.

சித்தர்களும் முத்தர்களும் நித்தமுந்துதிக்கூவரும்
வித்தகமருப்புடைய விநாயகனே — இத்தரையில்
தேர்வண்டிக் கால்சரிதை திரமையுடன் யானுரைக்க
நேர்மையுடன் வந்திடுவாய் நீ.

சுலோகம்.

இராகம்-கானடா-தாளம் ஆதி.

ஸ்ரீ கல்யாண குணோல்லாஸம் சித்விலாஸம்
மஹோராஸம்।
ஸேஷாத்திரி மஸ்தகேவாஸம் ஸ்ரீநிவாஸம்
பஜாமஹே ॥
வெங்கடாத்ரி ஸமஸ்த்தானம் பிர்ம்மாண்டே
நாஸ்தி கிஞ்சநா ।
வெங்கடேச சமோதேவம் நபூதோ
நபவிஷ்யதி ॥

ஜானகி காந்தஸ்மரணம் ஜயஜயராம்
கோபிகா ஜீவனஸ்மரணம் கோவிந்த கோவிந்தா.

இராகம்-ஆனந்த பைரவி-தாளம் ஜம்பை.

பல்லவி.

ஜயஜானகிரமண ஜயவிபீஷண சரண
ஜயஸரோருஹசரண ஜயதீனகருணா. (ஜய)

அனுபல்லவி.

ஜயலோகசரண்ய ஜயபக்தகாருண்ய
ஜயதிவ்யலாவண்ய ஜயஜெகதபுண்யா. (ஜய)

சரணங்கள்.

சகலலோகாவாஸ ஸாகேத புரவாஸ
அகளங்கநிஜதாஸ அப்ஜமுக வாஸா
சுகமுனி ஸ்துதிபாத்ர சுபதநிஜசாரித்ர
நிகிலஜகதாமித்ர நிகமசார காத்ரா. (ஜய)

கமனீயகோடீர கௌஸ்த்துபாலம்கார
கமலாக்ஷரகுவீர கமலாவிஹாரா
ஸமரரிபுஜெயதீர ஸகலகுணகெம்பீர
ஸ்ரீபதேசுகுமார கணபதிஸ்துதிபாத்ரா: (ஜய)

ஜானகீ காந்தஸ்மரணே—ஜெய ஜெயராம்.

போது வசனம்.

சுமார் நானூறு வருடங்களுக்குமுன் இப்பரதகண்டத்தின் கண்ணே வடபாகத்தில் நீர்வளம் நிலவளம் பொருந்திய பாகா நகர

மென ஒன்று பொன்னுமெடன புகழப்பெற்றிருந்தன. அந்நாட்டின் கண்ணே தனதான்ய சம்பன்னராய் வாழ்ந்துவரும் ஓர் வைசிய குடும்பத்தார் இருந்தார்கள் அக்குடும்பத்தில் வித்யாவந்தனென்றவன் குலவதியும் குணவதியுமான தர்மசீலை என்னும் பெயர் வாய்ந்த ஓர் கன்னிகையை விவாகம் செய்துக்கொண்டு சுகமே வாழ்ந்து வந்தார்கள். இப்படிக்கிருக்க, அவர்களுக்கு புத்திர சந்தானமில்லாமல் இருந்தபடியால் மனக்குறை நேரிட்டது.

அந்த குறை நிறைவேறும்படி ஸ்ரீமந் நாராயணனை பிரார்த்திக்கின்றனர்.

(மாதாடபாரதேனே என்ற மெட்டு)

இராகம்-காம்போதி-தாளம் சாப்பு.

பல்லவி.

இன்னம் பாராமுகமா ஏழையின்மீது — இன்

அனுபல்லவி.

பன்னகசயனனே பக்தர்கள்ரக்ஷகனே — இன்

சரணங்கள்.

சின்னஞ்சிறுவர்கள் செய்தபிழையகற்ற
முன்னம்வந்தேஎங்கள் முகமலர்ந்திடதேற்ற — இன்

மைந்தனில்லாகுறையால் மனம்வாடினேமைய்யா
வைகுந்தமதனில்வாழும் கோவிந்தனேமெய்யா — இன்

ஆதிபராபரமே ஆனந்தரூபனே
அன்பன்கணபதி பணியும்பொற்பாதனே — இன்

இந்த விதமாக ஸ்ரீமந் நாராயணனை தியானித்துக்கொண்டிருக்கையில் வித்யாவந்தனுடைய தகப்பன் அவர்களிடையில் வந்து மைந்தா! வருந்துவதினால் யாதுபயன், எல்லாம் எம்பெருமானுடைய திருவிளையாடலன்றோ? அப்படிக்கிருக்க நாம் வருத்தப்பட்டால் மட்டும் முடியுமா? தான தர்மங்களைச்செய்வோம் பிறகு எம்பெருமான் கிருபையினால் நமதுகுலம் விளங்கச்செய்தாலும் செய்யலாம் வருந்தாதே.

(தான தருமங்கள் செய்தல்.)

இராகம்-பூரிகல்யாணி-தாளம் ஆதி.

பல்லவி.

தானதருமஞ் செய்தார்—யாவரும்போற்ற
தானதருமஞ் செய்தார்,

அனுபல்லவி.

வானவர்தானவரும் யாவரும் மகிழ்ந்திட
மோனமுனிவர்களும் மகிழ்ந்து போற்றிட. (தா)

சரணம்.

ஏது இவரைப்போல
சாது பூமியிலிருக்
காது எனும்படிக்கு
தீது யாதொன்றில்லாமல்
திக்கெங்கினும் திகழ
பக்குவமாய்ப் புகழ. (தான)

இவ்விதமாய் தானதருமங்களைச் செய்தும் புத்திரனுண்டாகாமையால் மிகவு வருத்தங் கொண்டவர்களாய் தீர்த்தயாத்திரைகள் செய்யலாமென கருதி வித்யாவந்தன் தன்தந்தை முதலாகியவர்களைப் பார்த்து யாத்திரைசெய்வதற்கு அழைக்கின்றான்.

இராகம்-பிலஹரி-தாளம் ஆதி.

பல்லவி.

யாத்திரை செய்வோம்
நாமனைவருங் கூடி. (யா)

அனுபல்லவி.

யாத்தி—ரையால்—பாத்தி—ரர்களாவோம். (யாத்)

சரணம்.

கீர்த்திவாய்ந்தகங்கா யமுனாசரஸ்வதி
நேர்த்தியானகிருஷ்ணா நல்லகோதாவரி
பூர்த்தியானபெண்ணை பண்புறுங்காவேரி
கீர்த்தனங்கள்பாடி கணபதியைகோரி. (யாத்)

எனது ஆருயிர்க்குரிய தாய் தந்தைமார்களே! நாம் நல்ல புண்ணிய தீர்த்தங்களுக்குச்சென்று ஸ்நானஞ்செய்து வருவோம் அதன் பலனாவது நமது குலமானது விளங்கட்டும் சென்று வருவோம் என்று சொல்ல யாவரும் சம்மதித்து தீர்த்த யாத்திரைக்குச்சென்று ஸ்நானங்கள் செய்தும் யாதும் பயனற்றிருப்பதைக் கண்டு மனம் வாடினவர்களாய் வியாகூலப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் ஓர் பெண்பால் ஸ்ரீமந் நாராயணனை பஜித்துக்கொண்டு வருகின்றாள்.

அது எவ்விதமென்றால்,

இராகம்-தன்யாசி-தாளம் ஆதி.

பல்லவி.

முராஹரா நகதர கோவிந்த முகுந்த
மாதவா ரகு ராமா,

அனுபல்லவி.

கருணா ஹரா ஸ்ரீ நாராயணனே
கவுஸ்த்துபாலங்கார வைகுண்ட வாஸனே. (முரா)

சரணம்.

கம்ஸவிதாரா கமனியஹாரா
யமுனாவிஹாரா யாதவவீரா
கமலாவல்லப கோவிந்தகெம்பீரா
கணபதிபணிந்திடுங் கருடவாகனதீரா (முரா)

ஹே! சர்வலோக சரண்யா! கோவிந்தா! இந்த ஏழையாகிய அடியானை காப்பாற்றவேண்டும்.

இராகம்-மாயாமாளவகௌள-தாளம் ஆதி.

பல்லவி.

நாராயணம்பஜே நாராயணம் லக்ஷ்மி
நாராயணம்பஜே நாராயணம்

அனுபல்லவி.

நாராயணனை தினம் பாராயணம் செய்தால்
தீராவினைகள்யாவும் தீர்க்கும்திவ்யநாமம். (நாரா)

சரணம்.

தினகராம்பரம் திவ்யகங்கண தாம்
தீனரக்ஷகராமம் தாடகீஸம்ஹாரவீரம். (நாரா)

கருணாபயோ நிதிம் பவ்ய
சரணாகத நிதிம்
கரிமுகதி தாயகம் பத்ர
கிரிரத்ன நாயகம். (நாரா)

அஞ்ஞான நாசகம் பக்த
விஞ்ஞான பாசகம்
சிருங்கார நாயகம் பாத
கங்காதி தாயகம். (நாரா)

பாலன் கணபதி
பாடுங் கிருபாநிதி கோ
பால கருணாநிதி பரம
பதவை குண்டபதி. (நாரா)

இந்தவிதமாய் ஸ்ரீமந் நாராயணனை பஜித்துக்கொண்டே வித்யா வந்தனுடைய வீட்டிற்க்கருகாமையில் வந்துக்கொண்டிருக்கும் பரம பாகவதையான அப்பெண்மணியை கண்ணுற்ற,

## பொது விருத்தம்.

வித்யாவந்தன் தானும் வருகுமப்பெண்ணைகண்டு
பத்தியால் பணிந்துபோற்றி பரிவுடன்உபசரித்து
நித்திய கடன்முடித்து நாரணனைதான் நினைத்து
நித்தியம் நிகழ்ந்தவற்றை நாவினால் உரைசெய்தானே.

இவ்விதம் வித்யாவந்தனால் நிகழ்ந்தவற்றை கேள்வியுற்ற பக்த சிரோன்மணியாகிய அப்பெண்ணரசியானவள் ஒன்றும் தோன்றாமல் சற்று மவுனமாயிருந்து பிறகு ஓ! சற்குணசம்பன்னர்களே உலகத் தின் கண் 84-லக்ஷம் ஜீவராசிகளிலும் மேன்மை பெற்றது இம்மானி டப் பிரவியேயாகும். இம்மானிடற்களுக்குள் யாருக்கு எம்பெருமா னிடத்தில் பக்தியிருக்கின்றதோ அப்படிப்பட்டவர்களே சிரேஷ்ட மானவர்கள் அப்படிக்கிருக்க உங்களிடத்தில் அவ்வித பக்தி யில்லா மையால் தான் உங்களுக்கு இவ்வித கஷ்டங்கள் ஏற்ப்பட்டது என்றாள்.

அதற்கு வித்யாவந்தன் அம்மணீ! நாங்கள் எவ்வளவோ தான தருமங்கள் செய்தோம் தீர்த்தயாத்திரைகளும் செய்தோம் எந்த புண்ணியமும் முன்நிற்கவில்லை இனி யாங்கள் என்செய்வோம்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

வித்யா—குறைகள் தீர்க்கும் தெய்வமில்லையா—குவலயத்தில்
கோரும்வரம் கொடுத்திட மில்லையா

குற்றங்குறைகளை பெற்றவளுமதை
சுற்றமுடன்நீக்கி சற்றும் பொறுக்காளோ.

வாது வெங்கள் மீதினிலேத்து—வர்ம்மமதனை
தீதிலர்ம லெங்களுக்கோது. (குறை)

பெண்—குறைகள் தீர்க்கும் தெய்வமொன்றுண்டு—குவலயத்தில்
கோரும்பக்தர் தங்களைக்கண்டு
குற்றங்களைந்துமே நற்றவத்தோற்கு
சுற்றமுடனே சுகமுமருளும்
சுத்தசத்துவஜோதி யொன்றுண்டு—அதைதெரிந்து
பக்திசெய்ய பரமபதமுண்டு. (குறை)

ஹே! பாமரர்களே கேளுங்கள்! உலகம்படைத்த உத்தமனும் எம்பெருமான் உயிர்களை காப்பது அவன் கடமையாம். ஆயினும் அன்னவனிடம் பக்தி காட்டுதல் நம்போன்றவர் கடமையாகும் தெய்வம் இல்லாமலில்லை. தெய்வமுண்டு அத்தெய்வத்தை தெரிவிக்கின்றேன் கேளுங்கள்.

சுலோகம்.

ஸ்ரீகல்யாண குணோல்லாஸம்
சித்விலாஸம மஹோரஸம் ।
ஸேஷாத்ரி மஸ்த்தகேவாஸம்
ஸ்ரீநிவாஸம் பஜாமஹே. ॥

இராகம்-காம்போதி-தாளம் ரூபகம்.

பல்லவி.

ஸேஷாத்திரி கிரியில்வாழும்
ஸ்ரீநிவாஸனே தெய்வம்

அனுபல்லவி.

சேவிக்கு மடியார்கட்கு
மெதுவாகிய பதபங்கஜ
கெதியேயருள் பதியாகிய (ஸே)

சரணம்.

ஜென்மமெடுத்த நற்பயனை
நாடி தேடி பாடி பணிய
சின்னவன்கண பதியும்போற்றிடும்
சித்தர்களும் முத்தர்களும்
நித்தமுந் துதித்துவரும் (ஸேஷா)

அதாவது இந்த பாகா நகரத்திற்கு தெற்கே தக்ஷிண கைலாயமென்ற சிவக்ஷேக்ஷத்திரத்திற்கு மேற்கே மூன்றுகாதவழி தூரத்தில்

சொர்ணமுகரி ஆற்றிற்கு வடக்கே மூன்று நாழிகை தூரத்தில் ஆகாயமளாவி ஸேஷகிரியானது கோடிசூர்யபிரகாசம்போன்று திரு லோகத்திற்கும் சிறந்ததாய் விளங்கிவருகின்றது. அப்பர்வதத்தின் கண் எம்பெருமான் ஸ்ரீனிவாஸன் தன்னை வழிபடும் அடியார்களை பாதுகாற்கும் பொருட்டு எழுந்தருளியிருக்கின்றார். அன்னவரே இக்கலியுகத்தில் பிரத்யக்ஷ தெய்வம் அவரைவிடவேறு தெய்வங் கிடையாது. ஆகையால் நீங்கள் அவரை பக்தியுடன் பஜித்து வந் தால் உங்களுக்கு புத்திரபாக்கியம் கட்டாயம் கிடைக்கும். இது சத்தியம்.

தடாகமிருக்குமிடத்திற்குச்சென்று நீரருந்தாமல் காடு மேடுக ளிற்றிரிந்தால் தாகந் தணியுமா? அன்னமிருக்க அதை யுண்ணமல் சிறகுகளைத் தின்றால் நேரிட்ட பசியாறுமோ? இந்தக் கலியுகத்தில் சர்வசக்திஸ்வரூபம் சர்வவேத வேதாந்தமூர்த்தியுமாகிய பெருங்கரு ணையுள்ள திருவேங்கடனை நாடாமல், தர்மாத்தகாமமோக்ஷமென் னும் பலன்கள் சித்திக்கமாட்டாதென்பது திண்ணம். ஆகையால் நீங்கள் இன்றையதினமே திருவேங்கடநாதனுக்கு பிரார்த்தனைகள் செய்துக்கொண்டு அவர் திருவடிகளை யனுதினம் தவராமல் தியானி த்து வாருங்கள் உங்கள் மனக்குறைகள் கட்டாயம் தீர்ந்து சந்தான பிராப்தியுமுண்டாகும் யான் சென்றுவருகின்றேன்.

போது விருத்தம்.

மங்கையும் சென்றபின்பு மகிழ்வுடன் மனையைகூட்டி
மங்களதீபமேற்றி மால்தனை நினைத்துபின்னால்
தங்களின்குறையைசெப்பி தனையனும் தாயுமாக
தங்கத்திற்குழவியொன்றை தாங்கியே வருவோ மென்றார்.

ஷை விருத்தம்.

என்றிடுமெண்ணங்கூட எழில்பெரும்தொட்டிலிட்டு
நன்மையாய் பிரம்மோற்சவம் நடத்தியேவைப்போமய்யா
பன்றியின்வுருவம்தாங்கி பார்தனை எடுத்துவந்து
குன்றத்திலமர்ந்திருந்த கோவிந்தா போற்றியென்றார்.

இவ்விதமாய் இவர்கள் பிரார்த்தனை செய்துக்கொண்டிருப்பதை கண்ட தர்மசீலையென்பவள் தானும் பகவானை பிரார்த்திக்கவேண்டு மென்று எண்ணமுடையவளாய் தனித்த ஓர் இடத்திற்குசென்று திருவேங்கடபெருமானை பிரார்த்திக்கின்றாள். அதுஎவ்விதமென்றால்,

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

(எபுடு கிருபகல்குனு என்ற மெட்டு.)

பல்லவி.

எப்பொழுதுன் கிருபைவருமோ
ஏழைநா னறிகிலேன். (எப்)

அனுபல்லவி.

முப்பொழுதும் உன்தன்நாமம்
முகுந்தனே யான்மறவேன்
இப்பொழுதே வந்தென்தன்
குறைகளைந் திடுவீரே. (எப்)

சரணம்.

தாய்தந்தை குரு கணவன் தெய்வமும் நீயே என்று
தாணியில் நினைத்திருக்க தயைபுரிந்திடொணுதே
வாய்மொழி கேட்டுமகிழ வழங்குவாய் குழந்தையொன்றை
வயதய்ந்து ஆனபின்பு விடுவேனுன் தேர்காலிலே (எப்)

ஓ! ஜகத்ரக்ஷகா!! உன்னைப்போல் கருணையுள்ள தெய்வமும், அன்பர்களுக்கு நண்பனும், நல்லோர்களுக்கு நல்லவனும், அடியார்களுக்கு ஆதாரமானவனும் பதினன்கு லோகங்களிலு மில்லையாதலால் அப்பேர்பட்ட உன் திவ்விய திருவடிகளை சரணம் அடைவதை விட என்போன்ற மலடிக்கு நல்லவழி கிடையாது என எண்ணி இப்பொழுது நான் உன்னை வேண்டிக் கொள்வது யென்னவென்றால், எனக்கு எப்படியாகிலும் ஓர் புத்திரன் உண்டாகும்படி அருள் செய்ய வேண்டும். நான் அந்த குழந்தையினுடைய வேடிக்கைகளை பார்த்து மகிழ்ந்துவிட்டு ஐந்து வயதானபின் உனக்கு ரதோற்சவம் நடக்கும் காலத்தில் உன்னுடைய தேர்காலின் கீழ் போட்டு விடுகின்றேன், நான் அவ்விதம் செய்வே னென்பதை கட்டாயமாய் நம்பும் நம்பும். நான் அவ்விதம் செய்வேனுவென்பதை நீர் சந்தேகிக்கக் கூடும். நீர் அவ்விதம் சந்தேகிக்கவேண்டாம். கட்டாயம் நான் உம்மைக் கேட்டுக் கொண்டவாறே செய்து முடிப்பேன் இது சத்தியம் சத்தியம்.

போது விருத்தம்.

பாலனை வேண்டியேதான் பாவையும் தனித்திருந்து
கோலமாங் கருடனேறுங் கோவிந்த னடிபணிந்து

பாலனை பெற்றுபின்னல் பருவமைந்தானபோது
சீலமாய்த் தேரின்காலில் சிறுவனை விடுவேனென்றாள்.

இவ்விதமாய் பகவானை பிரார்த்தனைசெய்துவிட்டு தன்னுடைய குடும்ப காரியங்களை கவனித்துவரலானள். பிறகு தர்மசீலையின் விந்தையான பிரார்த்தனையைப் பார்த்து கபட நாடக சூத்திராவதார னான திருவேங்கடப்பெருமான் ஆச்சர்யப்பட்டு இதைபரிசோதித்து பார்க்கவேண்டுமென்றெண்ணி அந்த மாதிற்கு ஓர் புத்திரனை அரு ளிச்செய்தார். வெகு சீக்கிரத்தில் தர்மசீலையும் கர்ப்பவதியாகி பத் துமாதங்களும் கழிந்து ஓர் ஆண் சிசுவை யீன்றனள். பிறகு,

இராகம்-சங்கராபரணம்-தாளம் ரூபகம்.

பல்லவி.

ஆனந்த மாகினரே—யாவர்களும்
ஆனந்த மாகினரே.

அனுபல்லவி.

ஆனந்தமுடனே அகமும் மகிழ்ந்துமே
மோனமுனிவர்கட் கமுதளித்தே நல்ல (ஆன)

சரணம்.

தான தருமங்களும் தக்கப்படிசெய்து
தனையனில்லாகுறையை தகமையுடன்கொய்து
வானவர்வாழ்த்திமலர் மாரிகளைபெய்து
மனமும்மகிழ்வுடன் மங்களமாய்வாழ்ந்து. (ஆன)

இவ்விதமாய் யாவரும் மகிழ்ந்து பல தானதருமங்களுஞ்செய்து நல்ல சுபதினத்தில் அக்குழந்தைக்கு திருவேங்கட நாதனருளால் பிறந்தபடியால் "வெங்கடரமணனென" நாமகரணமிட்டு மகிழ்ந்தார் கள். பிறகு அக்குழந்தையை தொட்டிலிட்டு தாலாட்டி வருவது எவ்விதமென்றால்,

## தாலாட்டு.

இராகம் - ஆனந்தபைரவி.

ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆரிரரோ.

ஆராவமுதே ஆனந்தசாகரமே
ஆருயிருக்குயிரே அப்பனே கண்வளராய்.

தாலேலோஎன்றுசொல்லி தாலாட்டிசீராட்டி
தாரணியில்கலிதீர்க்கும் தங்கமேநீ கண்வளராய்

சீராருமெங்கள்குலம் சிறந்தோங்கசெய்தவனே
சிங்காரகண்மணியே சிரித்துநீ கண்வளராய்

முத்தேமரகதமே முக்கனியே சர்க்கரையே
முத்திபதமளிக்கும் முன்னவனே கண்வளராய்.

என்று இவ்விதமாய் தாலாட்டி மகிழ்ந்திருப்பாள். இந்த விதமாய் அக்குழந்தையின் அழகை பார்வையிட்டுக்கொண்டும் அக்குழந்தையின் பெருமையைப் பேசிக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருந்தார்களே ஒழிய திருவேங்கட பெருமானை மறந்துவிட்டதோடுஅவர்கள் செய்துக்கொண்ட பிரார்த்தனைகளையும் மறந்தவர்களாய் விட்டார்கள். இப்படிக்கிருக்க அவர்கள் பிரார்த்தனையின்படி வருடமும் ஐந்தாகியது. இவர்களும் பிரார்த்தனைகளை செலுத்தவில்லை அப்பொழுது கருணாநிதியாகிய ஸ்ரீனிவாஸன் இந்த நான்கு பேர்களின் அவிவேகத்தைப்பார்த்து இன்னும் தன் திருவிளையாடல்களை நடத்த எண்ணினவராய் தினந்தோரும் அவர்களுடைய கினவில் தோன்றிக்கொண்டு வந்தார். அது யெவ்விதமென்றால்,

இராகம்-தன்யாசி-தாளம் ஆதி.

பல்லவி.

கினவினில் தோன்றினாரே—அவர்களின்
கினவினில் தோன்றினாரே.

அனுபல்லவி.

கினவினில் தோன்றினார் நினைவுசெய்யும் படிக்கே
அனுதினமவர்கள் பிரார்த்தனையின் படிக்கே. (கின)

சரணம்.

மாலும் பட்டாடைகட்டி மங்களநாமமிதரித்து
நூலும்மணிந்துகொண்டு நாரணனென பேர்வரித்து
காலும்கடுக்கநடந்து காடும் கடந்துவேர்த்து
களைப்பும்கொண்டவர்போல் கையில் தடியுமெடுத்து (கின)

தவிர இன்னும் எவ்விதமாய் தர்மசீலைக்கு ஞாபகமூட்டினாரென்றால்,

தர்மசீலையானவள் தனித்து சயனித்துக்கொண்டிருக்கும் சமய

யம் பகவான் கினவில் தோன்ற திடுகிட்டவளாய் எழுந்து என்னபய ங்கரம் என்ன கினவு என்று.மறுபடியும் சயனிக்க,

இராகம்-கானடா-தாளம் ஆதி.

கண்ணிகள்.

நினைவுமூட்டும்படிக்கே நாரணன் தானுமே
கினவினில் தோன்றினாரே—தர்ம்மசீலையின்
கினவினில் தோன்றினாரே.

தவிர.

திருமலைபோலவும் திருவிழாபோலவும்
திவ்யமாய் தோன்றினாரே—தர்மசீலையின்முன்
திவ்யமாய் தோன்றினாரே.

இதுவும் தவிர.

திருவீதிபோலவும் திவ்பரதம்போலவும்
திருவேங்கடன் தோன்றினர்—நினைவுமூட்ட
திருவேங்கடன் தோன்றினர்.

இவ்விதமாய் திருவேங்கடன் தர்மசீலையின் கினவிலும் தோன்றியும் அவர்களுக்கு தாங்கள் செய்துகொண்ட பிரார்த்தனைகள் நினைவுவாராமல் மறந்துவிட்டார்கள். அவர்கள் பிரார்த்தனைசெய்துகொண்ட தினமே பாதிமறந்துபோய்விட்டன. பிறகு புத்திரன் பிறந்த உடன் முழுதும் மறந்துவிட்டார்கள். ஆபத்து உண்டான காலத்தில் பகவானை துதித்து கும்பிடுகள்போட்டது சம்பத்து உண்டான காலத்தில் அழைத்தாலும் வருமா? கூப்பிட்டாலும் பேசுமா? எத்தனை தடவை ஞாபகம் செய்தாலும் நினைவுக்கு எட்டுமா? எட்டவே எட்டாது. ஆனல் திருவேங்கடனிடத்தில் நன்மை எவ்வளவு இருக்கின்றதோ அதில் கோடியில் ஒருபங்காவது தீமையைத்தந்து தண்டிக்கும் சக்தியில்லாமற்போகவில்லை அதுஎவ்விதமென்றால் குழந்தைகளை ரக்ஷிக்க வேண்டியது தகப்பனுடைய கடமையானாலும் அக்குழந்தைகள் தப்புகள் செய்யுங்கால் சிக்ஷிக்கவேண்டியதுபோல அடியார்களை காப்பாற்றுவதும் தண்டிப்பதும் எம்பெருமானுடைய கடமையன்றோ. இது இவ்விதமிருக்க ஓர்நாள் ஷெ ஆசாமிகளுக்கு காற்றும் மழையும் கலந்துகொண்டதுபோல குளிர்காச்சல் உண்டாயிற்று, குமாரனாகிய வித்யாவந்தனுக்கோ வயிற்றுவலி சொல்லமுடியாது. தர்மசீலைக்கும் சூலைரோகமோ இயமனுடையபாணம்போல் துன்புறு

த்தியது இவ்விதம் நேரிட்டதினால் அவர்களுக்கு நேரிட்ட துன்பம் சொல்ல முடியாது. ஆகையால் அவர்கள்,

இராகம்-நாதநாமகிரியை-தாளம் ஆதி.

பல்லவி.

என்னகொடுமை யெங்களுக்கெனயுதித்த (தெ)

சரணம்.

முன்னாள் செய்தபயனோ இன்னாள் செய்தவினையோ
இன்னம் என்னவருமோ ஏதுமறிகிலோம்

முன்னவா கோவிந்தா
மாதவா ஹரியே

சின்னஞ்சிறுவர் யாங்களும்
செய்தபிழை பொறுத்திடா, (தெ)

இவ்விதமாய் யாவரும் வருந்தி புரண்டும் அழுதும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்களே யொழிய திருவேங்கடனை பிரார்த்தித்துக் கொண்டதைமட்டும் நினைத்தார்களில்லை. இவ்விதமாய் மென்மேலும் வியாதியதிகரித்துக்கொண்டிருக்குங் காலையில்.

இராகம்-கஜல்.

குளிருடன் காச்சலும் சேர்ந்ததினா லித்தேகம்
களைப்புடன் கைகால் குடைச்சலாகு ததிவேகம்
சளியுடனிருமலும் சூலைநோய் வாட்டுதே யனேகம்
சச்சரவினாலிந்த சகியாததாக சோகம்.

முடுகு.

இனி அரைக்ஷணமேனும் தாளமுடியாது
இறைவனிக்ஷணமெனை காக்காதுமுடியாது.

என்பதாய் வருந்துகையில்,

சிந்து.

வந்துமே சூழ்ந்தார்—பந்துமித்திரர்கள்
வந்துமே சூழ்ந்தார்

நொந்து பலர்களும் நாவினால் பேசியே
வந்ததே வினையென விதியை கண்டேசியே
பந்துகள் யாவரும் பற்பல பேசியே
சிந்தை நொந்திட சினேகர்மனம் கூசியே. (வந்)

இவ்விதமாய் பந்து மித்திரர்களும் மற்றவர்களும் வந்து நோயாளி களை சூழ்ந்துக்கொண்டு விசனப்பட்டார்களே ஒழிய நேரிட்ட வினை யைத்தீர்க்க அவர்களுக்கு சக்தியுண்டா? இல்லை. இவ்விதமாய் வந் தவர்களும் இருந்தவர்களுமாய் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில்,

ஆவேசம் வருதல்.

இராகம்-நோட்.

கோவிந்த கோவிந்த கோவிந்த கோவிந்த
கோவிந்த கோவிந்த கோவிந்தனே
கோவிந்த கோவிந்த கோவிந்த கோவிந்த
கோவிந்த கோவிந்த கோவிந்தனே.
கோவிந்தா கோவிந்தா,

இவ்வித ஆர்ப்பாட்டத்துடன் ஐந்துவயதுள்ள பெண்குழந்தையான து தன்னைமறந்து ஆவேசத்தால் ஆடிக்கொண்டு அவர்களின் நடுவில் வந்து,

இராகம்-அடாணு - தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

பிள்ளைகலிதீர்த்த பெருமானை நீங்கள்
பாரில் மறக்கலாமா—பாவை
கிள்ளைமொழிகளை கேட்டுமகிழ்ந்தால்
குற்றம் வருது போமோ.

பாரில் பரந்தாமன் பாதம்மறந்ததால்
நேரிட்டதிந்த தொல்லை—இதை
தெரிந்து திருவேங்கடத்தானை நீரும்
தெரிசிக்க வினை இல்லை.

இவ்விதமாய் அக்குழந்தை சொல்வதை கேட்ட மாத்திரத்தில் யா வரும் மெய்மறந்தவர்களாய் தாங்கள் செய்துக்கொண்ட பிரார்த்தனை யானது ஞாபகத்திற்குவர,

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஜெயஜெய ஸ்ரீ ஸ்ரீனிவாஸ வெங்கடேஸ்
ஸர்வேச ஜகதீசா பாஹிமாம்பாஹி (ஜெ)

அனுபல்லவி.

பவபயஹர பக்தரக்ஷகா
பாஹி பாஹீபன்னகசயனு (ஜெ)
பாலபிரஹலாதரக்ஷக பங்கஜநயனுஸ்ரீ

சரணம்.

ஆதிபராபர ஆனந்தஸாஹர
ஆபத்பாந்தவ அனுதிரக்ஷக
அஸுரவிதாரண ஆதிநாராயணு
அமரஜநப்ரியகணபதிவினுத (ஜெ)

இராகம்-இந்துஸ்த்தான் பியாக்-தாளம் ஆதி.

பல்லவி.

முரஹரி மாதவ கோவிந்தா வா
தரணிதனிலேவரம் தந்திட வா வா. (முர)

அனுபல்லவி.

கதிரவன் குலத்தினி லுதித்த சிங்காரர் திருப்
பதிதனில் பக்தர்களை பாதுகாத்ததீரா
கோர வரக்கர்சிரம் துணித்திட்ட தீரா
கோவிந்தா யென்றுன்னை கூப்பிடவாராய் (முர)

தொகையரு.

வீரசிங்காரனே ராவண சம்மாரனே
விண்ணவர்க் குபஹாரனே
தீர ஒய்யார கெம்பீர சுகுமாரனே
திருப்பதியில் வாழ் ஸ்ரீ ராமனே.

அனு-முடுகு.

பிழைதனை பொருத்திடு புண்ணிய மூர்த்தி
பவவினை யருத்துமே பதமருள் நேர்த்தி
மூண்ட வினையருப்பாய் முகுந்தனே கீர்த்தி
வாய்ந்த கணபதியும் வணங்கிடும் நேர்த்தி (முர)

இவ்விதமாய் பகவானை தியானித்து கற்பூர தீபமேற்றி கோவிந்தா! நாங்கள் செய்ததுகுற்றம் உன்னைநினைக்காமல்இருந்ததும்குற்றம் உன் பிரார்த்தனையை செலுத்தாமற்போனதும் பெருத்த குற்றமே, ஆகையால் ஹே கோவிந்தா! மன்னிக்கவேண்டும் உம்மை ரொம்

பவும் பிரார்த்திக்கின்ஞேம். இனி ஓர்நிமிஷமாகிலும் தாமதிக்காமல் உம்முடைய திருமலைக்குவந்து நாங்கள் சொன்னபடி பிரார்த்தனை கள்யாவும் செலுத்துகின்ஞேம். நாங்கள் அவிவேகத்தினுல் உம்மை மறந்து உம்முடைய பிரார்த்தனைகளை செலுத்தாமலிருந்ததற்காக அபராதமாக காணிக்கையைத் தருகிஞேம், என்றுசொல்லி ஓர் மஞ்சள் துணியில் திரவியம்வைத்து முடிப்புகட்டினுர்கள்.

இராகம்-சுருட்டி-தாளம் ரூபகம்.

பல்லவி.

முடிப்பு கட்டினுரே—கோவிந்தாவென்று
முடிப்பு கட்டினுரே.

அனுபல்லவி.

முடிப்பு கட்டினுர் மூண்டவினையருக்க
முகுந்தா மாதவ கோவிந்தா என்றுசொல்லி (முடி)

சரணங்கள்.

பீதாம்பரதாரா பீஜாக்ஷரரூபா
பங்கஜநயன பரபிர்ம்மசொரூபா
சாதுஜனநேத்ர சர்ஜனபாத்ரா
சீதா சமேதா சரணஞ் சரணமென்று (முடி)

இங்ஙனம் அவர்கள் பிரார்த்தனை செய்துக்கொண்டு முடிப்புங் கட்டின உடனே அவர்களுக்கு நேரிட்டிருந்த நவிகளெல்லாம், நெருப்பில் விழுந்த விட்டில் பூச்சிகளைப்போல் நாசமாயிற்று. அதனுல் அவர்களுக்கு இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாக ஆரோக்கியமும் சௌக்கியமும் உண்டாயிற்று. அதைப்பார்த்து அவர்கள் ஆச்சர்யமிகுந்தவர்களாய், திருவேங்கடனுடைய பெருமைகளைபுகழ்ந்து கொண்டாடினுர்கள். பிறகு திருமலைக்குப் போவதற்காக எண்ணி பிராமணர்களை அழைத்து நல்ல சுபதினத்தை பார்க்கும்படிச்செய்து அதின்பிரகாரம் பிராமணர்களால் சுபதினத்தைக் குறித்துக்கொடுத்து அதின் பலனையும் தெரிவிக்கின்ருர்.

இராகம்-கமாசு-தாளம் ஆதி.

பல்லவி.

தினமே சுப தினமாகுமித் (தின)

அனுபல்லவி.

தனதான்யமும் தரணியின் வாழ்வும்
தழைத்தோங்க செய்யும் தினமாகுமித் (தின)

சரணம்.

திருவேங்கடன் திருவடிபோற்றி
துதித்திடநல் தினமாகுமே
பிரவித்துன்பம் போக்கிடுமே
பாலன் கணபதி போற்றிடும் நல் (தின)

இவ்விதமாய் பிராமணர்கள் உரைக்க யாவரும் மகிழ்ந்தவர்களாய் அந்த சுபதினத்தில் பந்து மித்ராதிகளுடன் கூட்டமாய் கோவிந்த நாம சங்கீர்த்தனைபாடிக்கொண்டு திருமலைக்கு பிரயாண மானார்கள்.

சுலோகம்.

சேஷாத்ரி சிகர ரத்னம்
திருபுவன துரிதாந்த காரமார்த்தாண்டம்
பக்தஜன பாரிஜாதம்
வந்தே ஸ்ரீ வெங்கடேச மகிமேசம்.
கோவிந்தநாம சங்கீர்த்தம் கோவிந்த கோவிந்தா.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.
பல்லவி.

எபுடு கிருபகல்குனோ இனகுல திலகா நீ. (எ)

அனுபல்லவி.

எபுடைன நீ கண்ட்ளாகுஜிதே சாலுநநீ
எஞ்சிநின்னேசாலா நம்மியுன்னனு நாபை. (எ)

சரணம்.

தல்லிதன்றி குருதெய்வமு நீவேயனி
தலசியேவகனைன நன்னுப்ரோதுவனி
இல்லமு நந்துசாலா நம்மீக காலவாடை
யுண்டுடெருகவேமி வெங்கடேஸ்வரா நாபை (எ)

இராகம்-கீர்வாணி-தாளம் ஆதி.

பல்லவி.

மரிவேரே திக்கெவரய்ய ராமா
மாடிமாடிகி தெலுபாவலெனு (மரி)

அனுபல்லவி.

தரிதாபுலேனி நாஜாலி தீர்ச்சி
தயதோப்ரோசே தொரநீவேகாவா, (மரி)

சரணங்கள்.

நின்னு நம்மிசாலா யுன்னவாடனனுசு
நீ சித்தமுனகேக்காசி யுண்டலேதா
சன்னுதாங்கஸ்ரீ வரதவேங்கடேசா
நன்னுப்ரோவகா யுண்டுடநியாயமா (மரி)

இவ்விதமாய் பஜனைகள்செய்து ஆடிபாடிக்கொண்டு ஸ்ரீதிருப்பதி திருமலையடிவாரம் வந்துசேர்ந்து திருமலையின் அழகை பார்த்தவண்ணமாய்,

இராகம்-மோகனம்-தாளம் ஆதி.

பல்லவி.

என்னென்றுநான் எடுத்துரைப்பேன்
இம்மலைவளம் (என்)

அனுபல்லவி.

அன்னவாகனனாலும் அம்பிகைபாகனாலும்
ஆதிசேஷனாலும் ஓதிடப்போமோ இதை (என்)

சரணம்.

வானவரும் தானவரும் வாழ்த்திபுகழும்படி
மோனமுனிவருடன் முத்தர்களும்வாழும்படி
சித்த வித்யாதரர்கள் நித்தம் துதிக்கும்படி
சுத்தசுயஞ்சோதியாகி சுயம்பிரகாசமாகி

நின்று—அடியார்துயரை
கொன்று—கொடுமாயையை
வென்று—கோவிந்தமாதவா
என்று—யாவரும்போற்ற

பன்னகனும் சூழ்ந்திருக்க பக்தர்களும்வாழ்ந்திருக்க
நன்னயகணபதியும் நாளும்தியானித்திருக்க

(என்னென்று)

இவ்விதமாய்த் தங்கப்பிரகாசம் பொருந்திய திருமலையையும் காணி கோபுரங்களையும் கண்டு ஆனந்தபரவசராய் கூத்தாடி கொண்டாடிப் புகழ்ந்துக்கொண்டு யெம்பெருமானை தியானித்தவர்களாய்,

## பஜனை செய்தல்.

இராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேவேசகணாராதித் திவ்யாம்புஜபாதா
ஸ்ரீ வேங்கடகிரிநாயகா தேவா நமோ (தே)

கலிமானுஷ கலுஷாபஹ கமநீயஸ்-சீர்த்தே
அலமேலுமங்கா மோகனமூர்த்தே நமோ (தே)

ஜலஜாஸநபரிபாலன ஜகதேகநிதான
கலசாம்புதிதடசோபித கோவிந்தா நமோ (தே)

வகுலாஸன ஹரிசந்தன வனமத்யவிஹார
சகலாகமபரிபாலன சர்வேஸாநமோ (தே)

நாராயண நரபோஷண நரஹாதி ஸம்ஹரண
ஹேராவணமதபஞ்ஜன ராமசந்ராநமோ (தே)

ஸ்ரீகேசவ நாராயண கோவிந்தமுராரே
ஸ்ரீமாதவமதுசூதன தாமோதராநமோ (தே)

சேஷாசலநிலய வரபூஷமணிவலய
ரோஷாதிவிஜய மௌனிராமேதிராமம் (தே)

ரஜநீசரவரநாயக காலவனமாலா
பிரஜபாலனவரவிஜய வெங்கடேசா நமோ. (தே)

இந்தவிதமாய் பஜனைசெய்துக்கொண்டே ஆனந்தமயமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலைக் கண்டனர்.

இராகம்-இந்துஸ்த்தான் பியாக்-தாளம் ரூபகம்.

பல்லவி.

பார்புகழ்கோவிந்தன் வாழும்பதியிது
பாரடிபெண்ணே மாமயிலே

அனுபல்லவி.

நேர்மையுடன் தங்கஸ்த்தூபிகளுடனே
நல்லதோர்கோபுரம் காணுதுபார்

சரணம்.

தகதகதகவென ஜோதியுங்காணுது
தக்கமண்டபங்கள் தனிமையாய்தோணுது

துஜஸ்த்தம்பத்துடன் பலிபீடமும்
நிஜமாய் நம்மெதிரில் காணுது.

தோகையரு.

வானவரும் தானவரும் வாழ்த்தியே போற்றிடும்
வளமைமிகு திருப்பதியே
மோனமாமுனிவரும் மூழ்கியே ஜபஹோம
கற்மங்கள் முடிக்கும்பதியே

மூடுகு.

பற்பல தேசத்தார் பரமனை நாடி
பரம்பொருளிவரென பாடிக்கொண்டாடி

பாலன்கணபதி பாடிப்புகழ
சீலமுடன் சிறப் போங்கிநிகழ (பார்)

இந்தவிதமாய் அத்திருக்கோயிலின் வளப்பை கண்ணுற்றவர்களாய் கோபுரவாயக்கருகில் செல்லும்போது,

இராகம்-நாதநாமகிரியை-தாளம் ரூபகம்.

பல்லவி.

கண்டாமணியோசை கேழ்க்குதடிமானே
பண்டுவினைகளெல்லாம் பாக்குதடிதேனே

அனுபல்லவி.

அண்டத்துயிர்களின் கொண்டத்துயாமற
கண்டோம்கேட்டோமென்று களிக்கும்படியாக (கண்)

சரணம்.

துஞ்சும்பிறவித்துயரை யஞ்சியோடும்படிக்கே
நெஞ்சமுருகிபாடி நாடிவரும்பக்தர்க்கே
லஞ்சேலஞ்சேலென் றருளும்வெங்கடேசனே
நெஞ்சால்நினைப்போர்க்கு நற்பதிகிட்டுமென்றே (கண்)

இவ்விதமாய் கண்டாமணியின் ஓசையை கேட்டு ஆனந்தபாவச முடையவர்களாய் திருக்கோயிலின் வடபாகத்திலுள்ள திவ்ய புண்ய தீர்த்தமாகிய ஸ்வாமி புஷ்க்கரணியில்,

இராகம்-பிலஹரி-தாளம்-ஆதி.

பல்லவி.

தீர்த்தமாடினார் புஷ்க்கரணிதன்னில்
தீர்த்த மாடினார்.

அனுபல்லவி.

சேர்த்தி யாக பூர்த்தி பெறவேண்டி (தீர்)

சரணம்.

காமக்குரோத லோப மோகமுமகற்றி
நேமமுடன் திரு நாரணனை போற்றி
சோமசூர்யாக்னியில் சுருதிவாசி யேற்றி
சொல்லுங்கணபதி சூக்ஷுமவாக்யம்போற்றி (தீர்)

இவ்விதமாய் ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்நானம்செய்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீமந் நாராயணனை மனதில் தியானித்தவர்களாய் பிராகாரங்களை பிரதக்ஷணஞ்செய்து திருக்கோயிலினுள் சென்று இரண்டாம் பிராகாரத்தையும் வலம் வந்து துஜஸ்த்தம்பத்தை தெரிசித்து தெண்டனிட்டு கோவிந்தாவென கொண்டாடி மணிக் கோபுரமுங்கடந்து மூன்றும் பிராகாரத்தையும் வலம் வந்து மஹா மண்டபத்தில் சென்று,

இராகம்-கானடா-தாளம் ஆதி.

பிரார்த்தனை செலுத்தினரே பக்தியுடனே
பிரார்த்தனை செலுத்தினரே

அனுபல்லவி.

பிரார்த்தனை செலுத்தினர் பரந்தாமனைவேண்டி
பதுமையும் தொட்டிலும் பக்தியுடனேகூடி (பி)
கோவிந்தமாதவ கேசவநாராயண
பாவியெங்களையும் பக்ஷமுடன்காவென
தாவியடிபணிந்து திருவேங்கடாவென
தூவிமலர்களையும் துதித்துதித்தோமென (பி)

இந்தவிதமாய் தொட்டிலும் பதுமையும் சமர்ப்பித்துவிட்டு பிறகு உற்சவம் நடத்தலானார்கள்,

## உற்சவ சிறப்பு.

### (குதம்பைசித்தர் பாட்டின் வர்ண மெட்டு)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

ஆனந்தமாகவே யங்குரார்பணமும்
அன்புடன் நடத்தினர்—கோவிந்தனுக்கு
அன்புடன் நடத்தினர்.

ஈசனுதிபதிக்கு சித்தம்மகிழும்படி
சிறப்பாயுற்சவம்செய்தார்—கோவிந்தனுக்கு
சிறப்பாயுற்சவம் செய்தார்.

மங்களமுடனே மறையோர்கள் சூழ்ந்துமே
தங்கக்கொடியேற்றினர்—கோவிந்தனுக்கு
தங்கக்கொடியேற்றினர்.

வஜ்ரகவசத்துடன் விளங்கும் பொன்திருச்சியில்
வேங்கடன்பவனிவந்தார்—விநோதமாக
வேங்கடன்பவனிவந்தார்.

ஜகமெடுத்திடு மாதிசேஷன்மீது
நிஜமாய்பவனிவந்தார்—கோவிந்தனும்
நிஜமாய்பவனிவந்தார்.

கம்ஸனைகொன்றவர் ஹம்ஸவாகனமேறி
ஜீவ ஹிம்சையை தீர்க்கவந்தார்—கோவிந்தனும்
ஹிம்சைதீர்க்கவந்தார்.

இராகம்-நாதநாமகிரியை—தாளம் ஆதி.

பல்லவி.

என்னவென்றெடுத்துரைப்பேன் இந்த
அதிசயமிகுந்திடும் திருப்பதியுற்சவம் (என்)

சரணங்கள்.

சேஷசிங்கவாஹனமுடன் ஹம்சம்
கற்பகவிருக்ஷமுடன் பூபாலவாகனம்
முத்துபல்லக்கும் மோஹனவதாரம்
பத்தரைமாத்துள் பற்பலபிரபையும்
பக்தருமுக்தரு பணிந்துபோற்றிடும்
பெரியகருடவாகன சேர்வையைநான் (என்)

அனுதினம்துதித்திடும் அனுமந்தவாகனம்
மனமதுமகிழ்ந்திடும் வனவசந்தோற்சவம்
தினகரர்போற்றிடும் திவ்யயானைவாகனம்
திருமூர்த்திகளுடன் திக்குபாலகரும்
சீருட்யாளியஸ்வம் சிரந்தலங்காரத்துடன்
திருத்தேருச்சவம் திருவேங்கடனுக்கே. (என்)

இந்தப்பிரகாரமாக திருவேங்கடபெருமானுக்கு பிர்ம உற்சவங்கள் சகல வைபவங்களுடன் நடந்துக்கொண்டிருக்கையில் எம்பெருமானை ரதத்தில் எழுந்தருளச்செய்து அதிவிமரிசையுடன் சகல வாத்தியங் களும் கோஷிக்க ரதமானது "கடகட! தடதட" வென சப்தத் துடன் யாவரும் துதிக்கும்படியாய் வந்துக்கொண்டிருந்தது. இவ் விதம் வந்துக்கொண்டிருந்த ரதம் திடீரென மேருவைப்போல் அசை யாமல் நின்றுவிட்டன.

ஷை ரதம் நின்றயிடமோ பைராகிகளின் வாஸஸ்த்தளமாகிய ஸ்ரீ மஹந்துஹத்திராம் பாவாஜி சுவாமிகளால் ஏற்படுத்திய மடத்தரு காகும்.

ரதம்நின்ற காரணம் மட்டும் ஒருவருக்காவது தெரியவில்லை. அந்தசமயத்தில் தர்மசீலைக்குதான் பூர்வம்செய்துக்கொண்ட பிரார்த் தனையின் ஞாபகம் வந்துவிட்டது.

இராகம்-ஆனந்தபைரவி-வெண்பா.

திருவளரும் தேரதுவும் திடீரெனவேநிற்க
உருவமுள மங்கையவளுணர்ந்து—பெருமையுள
திருவேங்கடத்தானை திருவுளத்தால்நினைத்து
இருந்திட்டா ளிரும்பாணிபோல்

இவ்விதமாய் தர்மசீலையும் தான் செய்துகொண்ட பிரார்த்தனையும் ஞாபகத்திற்குவர யாதும் தோன்றாதவளாய் சிங்கசொற்பனங்கண்ட யானையைப்போல பதுங்கத்துடங்கினாள். பிறகு அந்த மாது அதிக பயமும் திகிலுமுடையவளாய் தேகம் நடுங்க அதிகவிசனத்துடன் இனி யென்னசெய்வோம் எவ்விதம் உய்வோமென எண்ணத்துடன் பரதவிக்கலானாள். மறுபடியும் தர்மசீலையானவள் குழந்தையை தன் கைகளால் இருகப்பிடித்துக்கொண்டு சற்று விலகிநின்றாள், உடனே ரதமும் தானே நகர்ந்து அவளருகிற்சென்று நின்றுவிட்டன. அது கண்ட தர்மசீலையின் மனதில் முன்னிலும் பன்மடங்கு பயமுதிகிலும் குப்பென்று எரியும் நெருப்பைப்போல் எறியத்தொடங்கின.

## தர்மசீலையின் துயரம்.

இராகம்-சகானா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அய்யய்யோ நானென்ன செய்வேன் இந்த
அரும்பாவிபெவ்வித முய்வேன்

மெய்நோக பெற்றபிள்ளை தன்னை
மனமுடன் கொடுத்திட்டபின்னே (அய்)

பாவியிலுங் கொடுபாவியானேன் எந்தன்
ஆவியை யிழந்திடலானேன்
மேவியுந்தன் பாதம்பணிந்தேன் கோவிந்தா
தாவிதாவி யுனை பணிந்தேன் (அய்)

இவ்விதமாய் வருத்தப்பட்டும் யாது பயனுமில்லாமல் போய்விட்டன ரதமோ அவ்விடம் விட்டு அகலவில்லை இதுகள் இவ்விதமிருக்க ரத மானது இவள் அருகிலேயே வந்து வந்து நின்றதை பார்த்திருந்த லக்ஷங்கணக்கான ஜனங்கள் கும்பல் கும்பலாய்க்கூடி இது யாது கா ரணத்தால் நிகழ்ந்தனவோ அரிகிலோமென ஆச்சர்யமுற்றவர்களாய் தர்மசீலையின் இருப்பிடத்திற்குவந்து,

இராகம்-மோஹனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

நிகழ்ந்ததென்ன சொல்லம்மா — நாங்களறிய

அனுபல்லவி.

நிகழ்ந்ததேதோசொல்வாய் நாரணன் தேரும்நிற்க
நானிலத்தில்நாங்களும் நயமுடனிருந்திட (நிகழ்)

சரணம்.

குற்றங்குறை செய்திருந்தால் கூருவாயெங்களம்மா
உற்றதையுணர்ந்துநீ உண்மையுடன் சொல்லம்மா
சுற்றமுடனேநீயும் சுகமாயிருப்பாயம்மா
சொன்னேமுன்னிடத்திலே சூக்ஷமம மிருக்குதம்மா (நிகழ்)

அம்மணி ! நீகடவுளுக்கு என்னகுறை செய்தாயென்று விசாரித்தார் கள் அதற்கு தர்மசீலை ஒன்றும் சொல்லத் தோன்றாமல் கல கல வெ ன்று கண்களில் ஜலம் ததும்ப அழுதுக்கொண்டிருந்தாள், இப்படி யிருக்க அவள்மாமனும் மாமியும் புருஷனும் அவளைநெருங்கிவந்து நீ கடவுளுக்கு என்னகுறை செய்தாயென்றும், தாங்கள் முன் பிரார்த் தனைசெய்துக்கொண்டு அதைச் செலுத்தத்தவறிப் போனதால் பட் ட்ப்பாடுபோதாதா வென்றும் விசாரித்தார்கள். அப்பொழுது தர்ம சீலை கூக்குரலிட்டு அழுதுக்கொண்டு,

இராகம்-நீலாம்புரி- தாளம்-திருபுடை.

பல்லவி.

என்னைப்போலிவ்வுலகத்தில்—கொடும்
பாவிகளும் உண்டோ ஐயா

அனுபல்லவி.

பொன் பொருள் பூமியுமிருக்க
சின்னவனை கொன்றிடவே (என்)

சரணம்.

இப்பெரும்ரதத்தை காண, என்மனம் கலங்குதய்யோ
இப்படியும் பிரார்த்தனைகள் ஏனோநான் செய்தேனய்யோ
இவ்விதம்வருகுமென்று யெண்ணிலேன் கினவிலுமே
இன்னுமேதாகினும் தருவேன் இறைவனே கண் பார்த்தருள்வாய்.
(என்னை)

இவ்விதமாய் பலவாறு சிந்தித்துக்கொண்டு இருக்குங்காலையில் அவளருகில் சூழ்ந்திருந்தவர்கள் இவ்விதமாய் பிரார்த்தனைகள் செய்துக்கொள்ளுவாருமுளரோவென ஆச்சர்யப்பட்டு இதுவும் பகவானுடைய திருவிளையாடலே யெனவெண்ணி இன்னும் என்ன நடக்கின்றதோ பார்ப்போமென சும்மாயிருந்தார்கள் இவர்கள் இப்படி இருக்க தர்மசீலையின் மாமன் மாமி புருஷன் ஆகிய மூவரும் தங்கள் தலைமேலடித்துக்கொண்டு,

இராகம்-சகனு-மீசுரதாளம்.

கண்ணிகள்.

மதியெங்கேபோச்சுதடி பெண்ணே உன்னுவிக்
கதிவரலாச்சுதடி கர்மமிது சொன்னேன் (மதி)

நித்தமுங்கடவுளை பணிந்தோம் நல்
சத்தியசீலனுன சிறுவனையடைந்தோம் (மதி)

செய்யாதகாரியங்கள் செய்தாய் நாம்
உய்யும்வழியதனை உண்மையாய் கொய்தாய் (மதி)

நீரைவிட்டாற்கெடும் மீனே பாலனை
தேர்காலில்விட்டாய் நமக்கார்துணைமானே (மதி)

மட்டிப்பெண்ணென லாமே முன்பு
பட்டப்பாடுகள்சொல்லப் பாரதமாமே (மதி)

பார்தனி லுந்தனைப்போல் மாது செய்யும்
பிரார்த்தனையால்வரும் பெருத்த தீது (மதி)

பெற்றப்பிள்ளையை பலிகொடுக்க பாரில்
குற்றமும் செய்தனை குடிதனைகெடுக்க (மதி)

துக்கசாகரத்தி லாழ்ந்தோம் காக்க
பக்கத்துணையின்றியே பள்ளத்தில் வீழ்ந்தோம் (மதி)

இவ்விதமாய் அவர்கள் மூவரும் தர்மசீலையை நிந்தித்துப்பேசி நீ இரகசியமாய்ச் செய்துகொண்ட பிரார்த்தனை இப்போது வெளியாய் விட்டது. முன் வெங்கடேசப்பெருமானுக்குப் பிரார்த்தனை செய்துக்கொண்டு நாம்பட்டபாடு போதும்போது மென்ருய்விட்டது. இனியாவது சுகமாயிருக்கலாமாவென்று எண்ணியிருந்தால் நாம் ஒன்று நினைக்க தெய்வமொன்று நினைக்குமென்ற பழமொழியாய் இப்பொழுது நம்முடைய கழுத்திற்கே கயிறுவந்துவிட்டதே என்ன செய்வோமென்று அழுதார்கள் இவ்விதமாய் யார் எவ்வளவு அழுத போதிலுங்கூட அந்தத்தேர் அசையவில்லை. அதைப்பார்த்து தர்மசீலை, ஆ! சுவாமி உன் தேரைக்கண்டால் என்மனம் நடுங்குகின்றதே யான் என்னசெய்வேன். இந்தக் குழந்தையினுயரமளவு பொருள்களை உமக்குச் சமர்ப்பிக்கின்றேன் நீர் இவ்விடம் விட்டு அசைந்துபோம்: என்னை மன்னிப்பீர்என்று மறுபடியும்,

இராகம்-தன்யாசி-தாளம் ஆதி.

பல்லவி.

குழந்தையை கேழ்க்காதீர்—கோவிந்தா நீரும்
குழந்தையை கேழ்க்காதீர்.

அனுபல்லவி.

குழந்தையைகேட்டால் குமருதே யென்நெஞ்சம்
குழந்தைநிற்குமளவு குவித்திடுரேன் கொஞ்சம் (கு)

சரணம்.

பெற்றபிள்ளைகளும் பெரும்பிழைசெய்தாலும்
பெற்றவர்பொருப்பது பெருங்குணமன்ருே. (கு)

சுவாமி! என்னுடைய அழகான குழந்தையைமட்டுங் கேழ்க்கவேண்டாமென்று பலவாறு பிரார்த்தித்தாள் அப்பொழுதும் அத்தேர் அசையவில்லை பிறகு மாமன், மாமி, புருடன் ஆகியமூவரும் அந்தத்

தேருக்கு எதிரில்வந்து நின்றுக்கொண்டு சுவாமி! இந்தக் குழந்தையைப்போல் தங்கப்பதுமை செய்து வருகிறவருடம் உம்முடைய தேர்க்காலண்டை போடுகிறோம் இந்த ஏழைகளை மன்னித்துதேரை யசைந்து போகும்படிச் செய்தருளவேண்டும் என்பதாய் பிரார்த்தித் தார்கள். அப்பொழுதுங்கூட அத்தேர் அசையவில்லை.

பிறகு ஜனங்களில் சிலர் தேறின்முன்வந்துநின்று, சுவாமி நீங்கள் குழந்தையைக் கேட்பது தர்மமேயல்ல. அந்த மாது தங்களுடைய மகத்துவமறியாது அவிவேகத்தால் இப்பேர்ப்பட்ட பிரார்த்தனைகள் செய்துக்கொண்டாள். நீங்கள் மன்னிக்காமல்போனல் இனியார் மன்னிப்பார்கள். ஆகையால் ஏழையாகிய எங்கள்மீது கிருபாகடாக்ஷம்வைத்து காப்பாற்றும்பொருட்டு தேருடதே அசைந்துபோம் சுவாமி என்று பிரார்த்தித்தார்கள். அதுயெவ்விதமென்றால்,

இராகம்-உதயரவி சந்திரிகா-தாளம் ஆதி.

பல்லவி.

கோவிந்த கோவிந்தா கோபாலா மாதவா
கோரும் பக்தர்களை கார்க்குமாதவா. (கோ)

அனுபல்லவி.

பாவி யாங்களும் பாதம் பணிய
ஆவியைதந்துநீ ரருளும் புரிய. (கோ)

சரணம்.

அந்தரத்தோர் பணிந் திடும் பிரதாபனே
ஆனந்த ரூபமாய் அமர்ந்திருப்போனே
அந்தமிகும்ரதத் தோடுநீரும் சென்று
ஆனந்தகண பதிக்கருள்வாயின்று.(கோ)

இவ்விதமாய் யார்பிரார்த்தித்துங்கூட ரதமானது கொஞ்சமும் சலனமில்லாமல்நின்றுக்கொண்டேயிருந்தது.வெகுநேரமாகிவிட்டது தர்மசீலையும் அவள் செய்துக்கொண்ட பிரார்த்தனையின்படி குழந்தையைப் போடவில்லை. இவ்விதமாய் எல்லோருதிகலடைந்துக்கொண்டு, இனியென்ன நடக்குமோவென்று பயந்தவர்களாய் பிரமையடைந்து ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இவ்விதமிருக்க தர்மசீலையின் கையிலிருந்த குழந்தையாகிய வெங்கடரமணன் தாயின்கையைவிட்டு கீழே யிரங்கிவந்து அவ்விடம் கூடியிருக்கும் ஜனங்களைச் சுற்றிப்பார்த்து பிறகு தன் தாயைநோக்கி,

இராகம்-பைரவி-தாளம் ஆதி.

பல்லவி.

அம்மா உனக்கென்னமதி வந்ததம்மா (அம்மா)

அனுபல்லவி.

சும்மா தயங்குவதில் சுகமுண்டாமோ வம்மா
பெம்மானடியில்விட்டு பாகதியடையாது. (அம்மா)

சரணம்.

இம்மானிலத்தவரும் அம்மானிலத்தவரும்
தம்மாயியன்றவரை தாள்பணிந்தேகோரும்
பெம்மான் முருகனின்
அம்மான் யாவரும் போற்ற
இம்மா மலையிலிரு
பொன்மா மணிமண்டப
சிம்மாதனத்திலிரு சுயஞ்சோதியதனை
எம்மாத்திரமாகிலும் சும்மாகண்டுகொள்ளாது. (அம்)

இவ்விதமாக தன்தாயைப்பார்த்து, அம்மா உனக்கு என்ன விவேக மில்லையா? பிரார்த்தனை செய்துக்கொண்டபோதிருந்த விவேகம் எங்கேபோயிற்று. கடவுளைப் பார்க்கிலும் கருணையுள்ளவர்கள் ஒருவருண்டோ? கடவுளை நம்பிக்கெட்டவர்கள் உலகில் யாராகிலுமுண்டா? நீயேன் நம்பிக்கையில்லாமல் இவ்விதமாய் பயந்துக்கொண்டு உன் பிரார்த்தனையைச் செலுத்தாமலிருக்கின்றாய். தாயே பயப்படவேண்டாம், கடவுளென்பது நன்மைக்கு ஓர் நிதியாகும், அவரும் அவர் அன்பர்களும் இந்த ஏழுமலைகளும் நன்மைக்கே என்பதை நீ உண்மையாக நம்பு. அவரிடம் அணுவளவாகிலும் தீமைகள் கிடையாது; தேடினாலும் கிடைக்காது. அப்படியிருக்க, நீ சந்தோஷத்துடன் என்னை யெடுத்து அவருடைய தங்கத்தேர்காலில்விட்டு, சுவாமி! இதோ என் பிரார்த்தனையை செலுத்திவிட்டேன் தயவு செய்து ஏற்றுக்கொள்ளும் என்பதாய்ச்சொல்லி நமஸ்கரித்துக்கொள்ளும் பயம்வேண்டாம். வாரும்போகலாமென்று அழைத்தான்:

அக்குழந்தையின் வார்த்தைகளை கேட்டவர்கள் யாவரும்வெகு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் தர்மசீலைக்கோ, அக்குழந்தையைப் போடுவதற்கு கொஞ்சமேனும் இஷ்டமில்லை. அவள் தன் குழந்தையைப்பார்த்து,

விருத்தம்.

அன்பின்களஞ்சியமே யறிவுள்ளயெந்தன்பாலா
தென்புடன்திருவேங்கடத்தான் தேர்க்காலில்விட்டுவிடவே
எந்தன்மனம்நோகுதய்யோ என்னநான்செய்வேனென்று
மந்தமாம்புத்தியுள்ள மங்கையும் மொழிந்திட்டாளே.

இவ்விதமாய் தர்மசீலேமொழிந்ததைக்கேட்ட குழந்தையாகிய வெங்கடரமணன் தன் தாயாகிய தர்மசீலேயை நோக்கி,

விருத்தம்.

அம்மணியென்னைப்போல அநேகரைபெற்றுவாழ்வாய்
யம்மணிவருந்தவேண்டாம் அரவிந்தனருளுமுண்டு
அம்மணியென்னையேந்தி யமர்கள்துதிக்கச்சென்று
அம்மணித்தேரின்காலில் அன்புடன்விடுவாய்போற்றி.

இவ்விதமாய் குழந்தைசொல்லியும் கேளாது என்ன ஆபத்துகள்வந்தபோதும் உன்னை அந்த பயங்கரமான தேரின்கீழ் போடமாட்டேனென்றுசொன்னாள் இவ்வார்த்தையைக்கேட்ட குழந்தையானது தாயைவிட்டு விலகி ஸ்ரீவெங்கடேசுவரன் எழுந்தருளியிருக்கும் தேரின் எதிரில்வந்து நின்று சுவாமியை தரிசனம்செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து நின்றுக்கொண்டு,

இராகம்-அம்ருதவாஹினி-தாளம் ஆதி.

பல்லவி.

அய்யனேயுந்தன்பாதம் அடைக்கலமேசதம்
அடியேனை காப்பாய்நிதம்.

அனுபல்லவி.

மெய்யனேசங்கு சக்கிரகையனே
மோக்ஷபதமளிக்கு முகுந்தகோவிந்தனே. (அய்)

சரணம்.

ஏனெனக்கித்தனை துன்பங்கள் வைத்தனை
இனிமேல்படமுடி யாதுகாவெந்தனை
மனமுடன்துதித்தேன் மகிழ்ந்துனைபணிந்தேன்
மைந்தன்க திமணி மங்களகோவிந்தனே. (அய்)

## ஆசிரிய விருத்தம்.

இராகம்-ஆனந்தபைரவி.

சோதியாய்த் தோன்றுமுருவமே யருவா
    மொருவனே சொல்லுதற்கரிய
வாதியே நடுவேயந்தமே பந்த
    மறுக்குமா னந்தமாகடலே
தீதிலாநன்மைத் திருவருட்குன்றே
    திவ்யத் திருவேங்கடத்தானே
யாதுநீ செய்வையோ யேதும்நானறிலேன்
    யானந்த மானபொருளே.

திருவேங்கடாவென்றுத் தேடிக்கொண்டாடி
    உன்திருவடியை மனதில்நாடி
மறவாமல்துதிசெய்ய மலையானபாவமும்
    மாண்டுபோம் மரணபவமும்
எரிகின்றதீயிலே யெரிந்திட்டபஞ்சுபோ
    லெவ்விதமான வகமும்
திருமலையில்வாழ்ந்திடும் தேவகணபொன்மணியே
    திருவேங்கடத் துமணியே.

இவ்விதமாய்த்தியானித்து கைகளைமேலெடுத்து கோவிந்தாவென்றுரைத்து சரணம் சரணம் என்றுசொல்லி அந்தரதத்தின்கீழ் விழுந்து விட்டான். அதைக்கண்டத்தாயாகிய தர்மசீலை அப்பா நான் உன்னைப்பிரிந்து எப்படி யிருப்பேனென்று அழுதுக்கொண்டே ஓட்டமாயோடிவந்து இரதத்தின்கீழ் விழுந்துவிட்டாள். புருஷன் அதைப் பார்த்து ஐயோ! தெய்வமே! மனைவியும் பிள்ளையும்போனபின் நானிருப்பதில் யாது பயனென்று சொல்லித்தானும் விழுந்து விட்டான். இதையெல்லாம் கண்ட கிழவனும் கிழவியும்இனி நமக்கென்ன இருக்கின்றதெனசொல்லிக்கொண்டே அவர்களும் விழுந்து விட்டார்கள். இவ்விதம் இவ்வய்வரும் விழுந்திறக்கத் துணிந்தகாக்ஷியைப் பார்க்க முடியாதவர்களாய் அநேகர் அவ்விடம்விட்டுப் போய்விட்டார்கள். சிலர் தெய்வமே! இது கொடுமையென்று ஓசையிட்டார்கள். சிலர் கைகளால் கண்களை மூடிக்கொண்டார்கள். இவ்விதமிருக்கும் சமயத்தில் அந்தரதமானது,

இராகம்-அடாணு - தாளம் ஆதி.

பல்லவி.

அசைந்தோடினதே ரதமும்
அசைந்தோடினதே யாவரும்போற்ற
அசைந்தோடினதே மலர்மாறி பெய்ய
அசைந்தோடினதே.

அனுபல்லவி.

அசைந்து அசைந்துஆடி அன்பரின்மீதோடி
ஆருயிரும்களிக்க ஆனந்தமாகவே. (அசை)

சரணம்.

திக்குபாலகர்போற்ற திசைமன்னர் மலர்தூற்ற
பக்குவமாகபல பாவலர்கவியேற்ற
தக்கசமயமென தேவர்கள்தாள்போற்ற
தனையன்கணபதியும் தேர்க்கால்திரமைபோற்ற.

மங்கள மெங்கினும்
தங்கியே பொங்கிட

தாமோதரனவனும் திருவுளம்தான்மகிழ்ந்து
தகிடதகதிமி தகிங்கிணதோமென (அசை)

இவ்விதமாய் அந்தரதமானது கொஞ்சம் பின்னுக்கு அசைந்து ஓரே பாய்ச்சலாய் அந்த ஐவர்களின்மீதும் பாய்ந்தோடியது அப்பொழுது ஆ! ஹா!! ஹா!!! என்ற சப்தம் கடலோசையைக் காட்டிலும் அதிகமாக எங்குபார்த்தாலு முண்டாயிற்று. மடிந்துபோய் விட்டார்களென்று சிலரும், நசித்துப்போய் விட்டார்களென்று சிலரும் கூச்ச லிட்டார்கள். ஆனால் உண்மையாக அவர்களுக்கு யாதொரு விபத்தும் நேரிடவில்லை. அந்த ரதமானது மல்லிகைபுஷ்பச் செண்டைப் போல் அவர்களின் பேரில் உருண்டு போயிற்று. ஆகையால் அவர்களய்வரும் யாதொரு ஆபத்துமின்றி எழுந்து திருவேங்கடனுடைய பெருமையைக்கண்டு துதிக்கலானார்கள்.

இராகம்-கேதார கௌளம்.

பச்சைமா மலைபோல்மேனிப் பவழவாய்க்கமலச்செங்கண்
அச்சுதாவமரரேரே ஆயர்தம் கொழுந்தேஎன்றும்
இச்சுவைத் தவரியான்போய் இந்திரலோகமாளும்
அச்சுவை வரினும்வேண்டேன் அரங்கமாநகருளானே.

இவ்விதமாக ஐவரும் பகவானை தியானித்துக்கொண்டிருக்கும்போது எல்லாஜனங்களும் இவ்வய்வர்களின்மீது புஷ்பமாரி பெய்தார்கள். சிலர் அக்குழந்தைக்கு ஆபரணங்களை சூட்டி அகமகிழ்ந்தார்கள் சிலர் அக்குழந்தையை தங்கள் கைகளால் எடுத்து மார்போடணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு மகிழ்ந்தார்கள். வாழ்த்துகள் கூறப்பட்டன. வாத்தியங்கள் முழங்கின ஜெய ஜெய வென்ற சப்தம் எங்கும் நிறைந்தன. கோவிந்தா வென்றசப்தம் எங்கும் பரவின, இந்தவிதமான குதூகலத்துடன் சகலமங்களங்களும் நிகழும் ஸ்ரீனிவாசனும் காக்ஷித்தாயாவரும் கோவிந்தநாம சங்கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு திருவேங்கடனுடைய பெருமையைக்கொண்டே தம் தம் இல்லம் சென்று சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

(கோவிந்தநாம சங்கீர்த்தனம் கோவிந்த-கோவிந்தா)

இப்புண்ணிய சரித்திரத்தை கேட்பவர்களுக்கும் வாசிப்பவர்களுக்கும் பிறருக்குச்சொல்லித் திருவேங்கடனுடைய பெருமையைக் கொண்டாடுகிறவர்களுக்கும் இதை எழுதி உபகரித்தவருக்கும், வெளியிட்டவருக்கும் திருவேங்கட பெருமானுடைய பரிபூரண கடாக்ஷமுண்டாகி இகபரங்களில் சர்வ மங்களகரமான சுகங்கள் ஏற்பட்டு ஸத்கதியடைவார்கள்.

சுபம்! மங்களம்!! மங்களம்!!!

இராகம்-சௌராஷ்ட்டரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

நீநாம ரூபமுலகு நித்தியாஜெய மங்களம் (நீ)

அனுபல்லவி.

ராஜீவ நயன தியாகராஜாதி ராஜவைடந (நீ)

ஓம் தத் சத்.

சர்வம் ஸ்ரீ கோவிந்தார்பண மஸ்த்து.

